பக்கங்கள்: 10

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 29 புதன்கிழமை 14.09.2022 கதிர் 311

### இனி இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இன்னும் நான்கு நாள்களில் ஒரு பூகம்பம் வெடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எல்லாம் 'போராட்டம் வெடிக்கும்' முழக்கம் புகழ் தலைவரின் சீத்துவத்தால் வந்த

☞2

# ஜெனிவாவில் இலங்கை மீது வலுவான தீர்மானத்துக்கு 4 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள வலியுறுத்து!

AMNESTY INTERNATIONAL | HUMAN RIGHTS WATCH | FORUM-ASIA | icj International Commission of Jurists

கொழும்பு,செப்.14

இலங்கை மீதான ஜெனீவாவின் வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச மன்னிப்புசபை, ஃபோரம் ஏசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு ஆகியவையே இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸில், சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்குப்

☞2

# போர்க் குற்றவாளிகளின் அரசாங்கமே ஆட்சியில்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் காட்டத்துடன் கருத்து
## ரணில் ராஜபக்ஷகளின் முகவரே அலி சப்றியாம்



கொழும்பு,செப்ரெம்பர் 14

**முஸ்லிமான அலி சப்ரியை வைத்து ராஜபக்ஷ அரசாங்கம் நாடகமாடுகிறது. ரணில் ராஜபக்ஷகளின் முகவரே அவர். நடப்பது போர்க் குற்றவாளிகளின் அரசாங்கமே. அதனால்தான் இறைமை பற்றி அலி சப்றி பேசி சர்வதேச விசாரணையை நடத்த விடாமல் செய்யப் பார்க்கின்றார். ஆனால் அந்தப் பருப்பு வேகாது என்றே நான் நினைக்கின்றேன்.**

**- இவ்வாறு காட்டத்துடன் கருத்துக் கூறியிருக்கின்றார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.**

☞2

## கடனை மறுசீரமைப்பு பேச்சுகள் ஆரம்பமாம்

இலங்கையின் கடனை மறுசீரமைக்க, கடன் வழுங்கியுள்ள சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் நிதி ஆலோசகர் லசார்ட் மூலமாக பேச்சுகல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

☞9

## ஜெனிவாவில் 28இல் இலங்கை விவகாரம்!

ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை வரும் 28ஆம் திகதி விவாதத்துக்கும் வாக்கெடுப்புக்கும் முன்வைக்கப்படும் என ஜெனிவா வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை தொடர்பாகத் தயாரிக்கப்படக் கூடிய புதிய பிரேரணை, 28ஆம் திகதி இறுதி சமர்ப்பணத்துக்கு வரும் வரை அங்கத்துவ நாடுகளின் விருப்பு வெறுப்புகள், எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, மாறி மாறி திருத்தங்களுக்கு உள்ளாகும் எனவும் கூறப்பட்டது

## டிராக்டார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்து; குடும்பஸ்தர் பலி

### முத்தையன்கட்டில் சம்பவம்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்தையன் கட்டுப்பகுதியில் வயல் உழவிற்காக டிராக்டரை வீதியால் செலுத்திக்

☞9

## வெள்ளவத்தை கடலை ஒட்டி 40 முதலைகள் உள்ளனவாம்!



கொழும்பு வெள்ளவத்தை கடலை ஒட்டியும் கால்வாயிலும் சுமார் 40 முதலைகள் சுற்றித்திரிவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஒன்று வெளியாகியிருக்கின்றது.

☞9

## மூன்று சிறார் பிக்குகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் கல்முனை விகாராதிபதி கைதாகி விளக்கமறியலில்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை,செப்.14

மூன்று சிறார் பிக்குகளை கல்முனை பகுதி விஹாரை ஒன்றில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செயதார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரபல பௌத்த விகாரதிபதியை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல்

☞9



## கைதிகள் தினத்தை முன்னிட்டு 417 பேருக்குப் பொதுமன்னிப்பு

கைதிகள் தினத்தை முன்னிட்டு 417 கைதிகள் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைதிகள் தினத்தை முன்னிட்டு, அரசமைப்பின் 34 ஆவது சரத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அபராதம் செலுத்த முடியாத மற்றும் சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு இவ்வாறு விடுதலை

☞9

## நியாய விலையில் மண்ணெண்ணை தராவிடில் வடக்கை முடக்கிப் போராட்டங்கள் வெடிக்கும்!

### மீனவ அமைப்புக்கள் இப்படி எச்சரிக்கை




(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.14

வடக்கு மீனவர்களின் படகுகளுக்குத் தேவையான மண்ணெண்ணை நியாய விலையில் வழங்கப்படாவிட்டால் வடக்கை முடக்கி போராட்டங்களை முன்னெடுக்கப்படவுள் என என மீனவ அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

☞9

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம்தான்.

'பார்போம் தம்பி', 'செய்வோம் தம்பி', 'பொறுங்கோ தம்பி' என்று எல்லாவற்றையும் வாய்ச்சவடால் கதையால் இழுத்தடித்து, கடைசியில் கட்சிக்குச் சீரழிவைத் தேடி தந்திருக்கும் தலைவருக்கு எதிராக எல்லா மட்டங்களிலும் கட்சியினர் சீறத் தொடங்கிவிட்ட நிலையில், கட்சி வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டுகின்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம், மாட்டின் வீதியில் நடந்த கட்சியின் யாழ் மாவட்ட உள்ளூராட்சி பிரமுகர்களின் கூட்டத்தில் வைத்து ஸ்ரீதரன் எம்.பி. கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு செம 'அர்ச்சனை' கொடுத்த விடயம் தெரிந்ததே.

பதில் அளிக்கவே வழியில்லாமல் மடக்கப்பட்ட தலைவர், குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் தராமல் நழுவினர். ஸ்ரீதரனின் ஆவேசம் வழமை போல தலைவரின் விடயதில் எருமை மாட்டில் பெய்த மழை போன்று அவமாயிற்று.

இவ்வளவு காலமும் கட்சித் தலைவருக்கு முண்டு கொடுத்து, அவரைச் சமாளித்துக் காபந்து பண்ணி வந்த சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் இனியும் பொறுக்க முடியாது என்று குறிப்பிட்டு, தலைவருக்கு எதிராகப் பகிரங்க வெளியில் வெடித்திருக்கிறார். தலைவரை வாங்குவாங்கு என்று வாங்கிடான் தொலைக்காட்சியில் அவர் வழங்கிய பேட்டி, வைரலாக உலா வந்து மாவையின் சீத்துவத்தைப் பிய்த்து உதறுகிறது.

பக்கத்தில் நின்ற சீவீகேயாரே சீறத் தொடங்கியிருக்கிறார், இனியும் நாங்களும் ஏன் மௌனம் பேண வேண்டும் என்று பல மட்டங்களும் தயாராகி வருகின்றன என்று கேள்வி.

எட்டு வருடம் தலைவராக இருந்து, கட்சியை குட்டிச்சுவராக்கியமை மட்டுமே இன்னும் முதலமைச்சர் கனவில் மிதக்கும் மாவையின் சாதனை என்று தமிழரசின் மிக முக்கிய வட்டாரம் ஒன்று குறைபட்டு கொண்டது.

எட்டு வருடதலைமைத்துவத்தில் கட்சியின் ஒரே ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி உள்ள மாவை சேனாதிராசாவை ஞாயிறு நடக்கும் மத்திய குழுக் கூட்டத்தில் வேட்டியை உருவாத குறையாகக் கேள்விகள் கேட்டு பிய்த்து உதற ஓர் அணி தயாராகி வருவதாகவும் தகவல் உண்டு.

இந்த மத்திய குழு கூட்டத்தில் பங்கு பற்ற வேண்டிய சுமந்திரன் எம்.பி. திடீரென நேற்று மாலை ஜெனிவா பயணமானார்.

அங்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயத்தை கையாளும் அமெரிக்கப் பிரதிநிதி நாளை வியாழக்கிழமை அவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட மற்றைய நாட்டுப் பிரதிநிதிகளுடன் உத்தியோகப்பற்றற்ற கூட்டம் ஒன்றைக் கூட்டி உள்ளார். அதில் கருத்துரை வழங்கவும், இலங்கை நிலைமை குறித்து விளக்கம் அளிக்கவும் சுமந்திரன் அழைக்கப்பட்டு இருக்கின்றார் என்று தெரிகிறது.

அதன்பின்னர் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இலங்கை விடயம் தொடர்பான பிரேரணை தயாரிப்பதற்கான உத்தியோகபூர்வ கூட்டம் ஒன்று அங்கத்துவ நாடுகளினால் முன்னெடுக்கப்படுகின்றது. உத்தியோகபூர்வ கூட்டமாயினும் அது மூடிய அறையில் நடக்கும். திறந்த அரங்கில் அல்ல. கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள் எல்லாம் அதில் பங்கு பற்றலாம். பிரேரணையின் முதல் நகல் அங்குதான் தயாராகும்.

இந்தக் கூட்டம் முதலில் 19ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. அதற்கு சுமந்திரன் அழைக்கப்பட்டார். எனினும் 18ஆம் திகதிய கட்சியின் மத்திய குழு கூட்டம் மிக முக்கியமானது என்பதால் 19ஆம் திகதி வரை ஜெனிவாவில் தாம் தங்கி இருக்க முடியாது என்று சுமந்திரன் ஜெனிவாத் தரப்புகளுக்கு கோடி காட்டினார். அதன் பின்னர் அந்த கூட்டம் 19ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதிக்கு முற்போடப்பட்டதாக சுமந்திரனுக்கு அறிவிக்கப்பட்டது. அதனால் 16ஆம் திகதிக் கூட்டத்திலும் பிரேரணையின் முதல் வடிவமைப்பிலும் பங்கு பற்றி விட்டு, அடுத்த நாள் ஜெனிவாவில் இருந்து புறப்படுவார் சுமந்திரன்.

18ஆம் திகதி காலையில் கொழும்பு வந்து சேரும் சுமந்திரன், விமான நிலையத்திலிருந்து நேரடியாகப் புறப்பட்டு வவுனியாவில் மத்திய குழு கூட்டத்திற்கு விரைவார். எப்படியாயினும் மதியம் வாக்கில் தான் மத்திய குழு கூட்டத்திற்கு வந்து சேர்ந்து விடுவார் என சுமந்திரன் கட்சி நிர்வாகிகளுக்கு அறிவித்துள்ளார்.

காலையில் மத்திய குழுவில் பிரளயம் வெடித்தால் மதியத்துக்கு பின்னர் சுமந்திரன் வந்து சமாளித்து, மல்லுக்கட்டுவோரைப் பிடித்து, பிரித்து விடலாம் என நினைக்கிறேன்.

தமிழரசுக்கு இது வாழ்வா, சாவா நிலைமை. இப்போதும் அது சுதாரிக்காவிட்டால் வயோதிப மடத்துடன் சேர்ந்து கட்சியும் வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டியதுதான்...!

**- மின்னல் -**

## போர்க் குற்றவாளிகளின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு நேற்று மாலை தாம் வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். அதன் விவரம் வருமாறு:-

கேள்வி: ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் அமைச்சர் அலி சப்ரியின் அறிக்கை பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: சிங்களத்தில் ஒரு முது மொழி உண்டு 'கொஹட யன்னே. மல்லே பொல்' என்பார்கள். அதாவது 'எங்கே போகின்றாய் என்று கேட்டால் பையிலே தேங்காய் என்று மறு மொழி சொல்வது போல்' 46/1 பிரேரணையை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்று கேட்டதற்கு சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்த இருப்பதாகவும் பொருளாதார ரீதியாக அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்றும் கூறியுள்ளார்.

எனினும் நடைமுறைப்படுத்தாமைக்கு ஒரேயொரு காரணம் அவரின் பேச்சில் தென்படுகிறது. அதாவது சர்வதேச நீதிபதிகள் போர்க்குற்ற விசாரணையை நடத்துவது நாட்டின் இறைமையைப் பாதிக்கும் என்றுள்ளார். அது வெறும் பிதற்றல்.

முதலாவது - இலங்கை அரசாங்கம் உள்ளடங்கலாகவே 46/1 பிரேரணை சென்ற ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இலங்கை அதை ஏற்க முடியாது என்று அன்று வெளிநடப்பு செய்யவில்லை.

இரண்டாவது - ஏப்ரில் 21 ஆம் திகதிய உயிர்த்த ஞாயிறு விசாரணைக்காகப் பிறநாட்டு விசாரணையாளர்களை அரசாங்கம் தருவித்து விசாரணை நடத்தியது. அப்போது நாட்டின் இறைமை எங்கு போனது?

மூன்றாவதாக - போர்க்காலத்தில் இஸ்ரேலிய மொஸாட் போன்ற அமைப்புக்களை இங்கு தருவித்து அரசாங்கத்திற்குச் சார்பாக, புலிகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட வைத்த போது எமது நாட்டின் இறைமை எங்கு போனது?

நான்காவதாக - உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு பற்றி ஷானி அபேசேகரா என்ற சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் விசாரணை செய்த போது, அந்தக் குண்டு வெடிப்பில் இராணுவத்தினரின் பங்கு இருந்தமை அவருக்குத் தெரிய வந்தது. அதுபற்றி இராணுவத்தினருடன் பேசிய போது, அவர்கள் தமக்கு இட்ட ஆணைகளையே தாம் நிறைவேற்றினார்கள் என்று கூறியுள்ளார்கள். ஆகவே குண்டு வெடிப்பில் அரசாங்கத்தின் பங்கு இருந்திருக்கின்றது. இதையே பேராயர் மல்கம் ரஞ்சித்தும் கூறி வருகின்றார்.

ஆனால் விசாரணை பற்றிய அறிக்கை வெளிவந்ததும் ஷானி அபேசேகராவைச் சிறையில் அடைத்தார்கள்.

இவ்வாறான ஒரு நாட்டில் உள்நாட்டு விசாரணையின் ஊடாக உண்மை புலப்படுமா? உண்மையை வெளிவர அரசாங்கத்தினர் இடம் அளிப்பார்களா?

முஸ்லிமான அலி சப்ரியை வைத்து ராஜபக்ஷ அரசாங்கம் நாடகமாடுகிறது. ரணில் ராஜபக்ஷகளின் முகவரே அவர். நடப்பது போர்க் குற்றவாளிகளின் அரசாங்கமே. அதனால்தான் இறைமை பற்றி அலி சப்ரி பேசி சர்வதேச விசாரணையை நடத்த விடாமல் செய்யப் பார்க்கின்றார். ஆனால் அந்தப் பருப்பு வேகாது என்றே நான் நினைக்கின்றேன். - என்றார்.

## ஜெனிவாவில் இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக் கூறல் தொடர்பான, தற்போதைய ஆணைகளை வலுப்படுத்தும் மற்றும் நாட்டின் சீரழிந்து வரும் மனித உரிமை நிலைமைகளை கண்காணிக்கும் வகையில் வலுவான பிரேரணையை முன்மொழிந்துள்ளது.

இந்தப் பிரேரணையைப் பேரவையில் நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நான்கு அமைப்புக்களும், பேரவையின் உறுப்பு நாடுகளிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்துவது உட்பட, நடப்பு துஷ்பிரயோகங்களுக்குத் தீர்வு காணவும் இலங்கைக்கு இந்தத் தீர்மானத்தின் மூலம் அழைப்பு விடுக்க வேண்டும்.

இலங்கை, கடுமையான பொருளாதார, அரசியல் மற்றும் மனித உரிமைகள் நெருக்கடியைச் சந்தித்து வருகிறது.

இலங்கையில் கடந்தகால சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல ஆண்டுகளாக நீதியைக் கோரி வருகின்றனர். அதே நேரத்தில் அடுத்தடுத்த அரசாங்கங்கள் வாக்குறுதிகளை மீறி, பொறுப்புக்கூறலைத் தடுத்து, போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை உயர் பதவிக்கு உயர்த்தியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, பொறுப்புக்கூறல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்தும் வகையில், இலங்கை மீது அழுத்தம் கொடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இலங்கை தொடர்பான தமது அறிக்கையில் ஆழ்ந்த இராணுவமயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை, தண்டனையின்மை என்பன கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கான சூழலை உருவாக்கின என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் விவரித்துள்ளார்.

எனவே இலங்கைக்குள் பொறுப்புக்கூறல் இல்லாத நிலையில், மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள், குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கையர்களை சர்வதேச நீதிமன்றங்களில் விசாரணை செய்ய வேண்டும் என்றும், வெளிநாடுகளில் உள்ள திருடப்பட்ட சொத்துக்களை கண்டுபிடித்து முடக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.

2019 ஏப்ரல் 21 தாக்குதல்களில் 250 க்கும் மேற்பட்டவர்கள் கொலையுண்டமை தொடர்பான விசாரணைகளில் சர்வதேச பங்கிற்கு அழைப்பு விடுத்த உயர்ஸ்தானிகர், இலங்கை பாதுகாப்புப் படைகளின் பங்கு குறித்து பதிலளிக்கப்படாத கேள்விகள் எஞ்சியுள்ளன எனவும் குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்தல், இடைக்காலத்தில் அதன் பயன்பாட்டிற்கு உடனடித் தடை விதித்தல், சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்தல், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படாத குற்றச்சாட்டுகளை எதிர்நோக்காத அனைவரையும் உடனடியாக விடுதலை செய்தல் ஆகியன இடம்பெற வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா கோரியுள்ளார்.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு உறுதியளித்தன. எனினும் அவை முறியடிக்கப்பட்டன அல்லது மறுக்கப்பட்டன என்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பணிப்பாளர் யாமினி மிஸ்ரா குறிப்பிட்டுள்ளார்.

எனவே உறுப்பு நாடுகள் இலங்கைக்கு அதன் உறுதிப்பாடுகள் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் மற்றும் நடப்பு துஷ்பிரயோகங்களை முடிவுக்குக்கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யாமினி மிஸ்ரா வலியுறுத்தியுள்ளார்






# ஒரு நேர உணவின்றி 6 லட்சம் பேர் பட்டினியிலிருக்க இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் தேவை தானா?

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி காட்டம்



(ஹுஸ்பர்)

நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் இலங்கையில் ஒரு வேளை உணவின்றி 6 லட்சம் பேர் பட்டினியால் வாடுகின்றனர் என உலக உணவு ஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் 37 இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் தேவைதானா என நல்லாட்சிக்கான தேசிய முண்ணனியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளரும் கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம்.எம்.நசுருதீன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிண்ணியாவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

நாட்டு மக்கள் மீது அக்கறை செலுத்தாத பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதளவுக்கு இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் வேதனையளிக்கிறது.

அன்றாட ஜீவனாம்சத்துக்குத் தடுமாறும் அப்பாவி மக்களின் நிலையை கருத்திற் கொள்ளாது கட்சிகளையும் அரசாங்கம் சார்ந்த கட்சி பிரதிநிதிகளும் அமைச்சு பதவிகளைப் பெறுவதும் கட்சிகளைக் கட்டியெழுப்பவும் காட்டும் கரிசனை நாட்டின் மீதும் மக்கள் மீதும் அணுவளவும் காட்டவில்லை இதனால் நாடு அதளபாதாளத்துக்கு சென்று கொண்டிருக்கிறது.

அரசியல் சுமுகமான நிலை உருவாகவில்லை. பொருள்களின் விலையோ ஆகாயத்தை தொடுமளவிற்கு எகிறியுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டைக் குட்டிச் சுவராக்குவதற்கு சேறு பூசும் ஒரு நிலையை வரிந்து கட்டுமளவுக்கு இந்த அரசாங்கம் செயற்படுகிறது. யுத்தத்தின் பின் நிரந்தரமாக சந்தோசமான வாழ்வு வாழக் கனவு கண்ட மக்களின் நிலை தற்போது சின்னா பின்னமாகியுள்ளது. இவ்வாறான நிலை தொடருமானால் நாட்டு மக்களின் நிலைமை பாதிக்கப்படும். பல இராஜாங்க அமைச்சுக்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. மக்களின் நலனில் மீது அக்கறை செலுத்த முன்வாருங்கள். – என்றார்.

# நாட்டில் 19 ஆம் திகதி விசேட அரச விடுமுறை! பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

நாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 19 ஆம் திகதி விசேட அரசாங்க விடுமுறையாக பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கைக் குறிக்கும் வகையில் இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க விடுமுறை தடையாக இருக்கக் கூடாது என அந்த அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் அன்றைய தினம் தேசிய துக்க நாளாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூரில் ஆரம்பம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 24.09.2022 அன்று நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் 8 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. பயிலவிரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களை பெற்று 20.09.2022 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அரச வேலைநாள்களில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## களநிலமை சாதகமே

நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டுமானால் முதலில் வயலை நன்றாக உழுது பண்படுத்த வேண்டும். உழுத வயலில்தான் மகசூல் அதிகம் கிடைக்கும். கட்டாந்தரையில் விழும் விதைகள் பயனற்றுப் போகும். நல்ல சேற்று மண்ணில் விதைக்கப்பட்டவை நல்ல விளைவைத் தரும்.

இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் ஒரு விளைச்சலை – விளைவை – எதிர்பார்த்து நிற்கின்றார்கள் தமிழ் மக்கள்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில், அங்கு இம்முறையும் வழமை போல புதிய பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது. அப்படிச் செய்தால்தான் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் நீதி, நியாயம் கிட்டச் செய்வதற்கான சர்வதேச சமூகத்தின் விடாமுயற்சி தொடர முடியும்.

அத்தகைய பிரேரணையை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குக் கொண்டு வருவதற்கான தளம் – களம் – சரியாகப் பண்படுத்தப்பட்டு, உழப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

நேற்று முன்தினம் கவுன்ஸிலின் 51 ஆவது அமர்வு ஆரம்பமானபோது இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல விளக்க அறிக்கை கவுன்ஸிலில் வெளியிடப்பட்டது.

அதன் பின்னர் அதை ஒட்டி, நாடுகளினதும், பொது அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் வெளியிட்ட சுருக்க உரைக் கருத்துக்கள் இவ்விடயத்தில் களத்தைப் பண்படுத்தும் வேலைதான்.

புதிய பிரேரணையை நாட்டி, வளர்ப்பதற்கான சரியான தளநிலமை ஏற்பட்டிருப்பதைத் திங்களன்று நடைபெற்ற அமர்வு வெளிப்படுத்தி நிற்கின்றது.

திங்கள் அமர்வில் கொழும்பு அரசுக்குச் சாதகமாகவும், பத்துக்கு மேற்பட்ட நாடுகள் உரையாற்றி இருந்தன. அவை தொடர்பில் இரண்டு விடயங்கள் அவதானத்திற்குரியவை.

ஒன்று – அந்த நாடுகள் அனைத்தும் தொடர்பிலும், இலங்கை மீது இருப்பது போன்ற மிக மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

அடுத்தது – அவற்றில் ஓரிரண்டை தவிர, ஏனைய நாடுகள் எவற்றுக்கும் தற்போதைய ஜெனிவா கவுன்ஸிலில் வாக்களிக்கும் உரிமை இல்லை.

அதேசமயம், மேற்கு நாடுகள் பலவும் – 27 ஐரோப்பிய நாடுகள் சேர்ந்த ஐரோப்பிய ஒன்றியம் உட்பட –இலங்கை தொடர்பில் கொழும்பு அரசுக்கு காட்டமான நிலைப்பாட்டையே வெளிப்படையாக தெளிவுபடுத்தின. இவற்றில் பலவற்றுக்குக் கவுன்ஸிலில் இம்முறை வாக்களிக்கும் உரிமை உண்டு.

ஆக, இலங்கை தொடர்பில் கொழும்பு அரசுக்கு காட்டமான – உறைப்பான – செய்திகளை தெரிவிக்கக் கூடிய ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து வெற்றிகரமான தீர்மானமாக நிறைவேற்றக்கூடிய களச் சூழல் இருப்பதையே திங்கள் நடைபெற்ற அமர்வின் பிரதிபலிப்புகள் உணர்த்துகின்றன.

இலங்கை தொடர்பில் கடுமையான வாசகங்கள் கொண்ட பிரேரணையை முன்மொழிவது, அதை வெற்றிகரமான தீர்மானமாக நிறைவேற்றச் செய்வதில் இடைஞ்சலைத் தரும் என்று எண்ணாமல், காரியத்தை மேற்கு நாடுகள் கொண்டு செல்லக்கூடிய புறச்சூழல் இப்போது உள்ளது.

அதற்கேற்ப தள நிலைமை – களச் சூழல் – பண்பட்டு இருப்பதாகவே தெரிகிறது. பார்ப்போம் மேற்கு நாடுகள் என்ன செய்யப் போகின்றன என்பதை.

# 69 லட்சம் மக்கள் வழங்கிய ஆணை துஷ்பிரயோகததுக்குள்ளாக்கப்பட்டது!

## டலஸ் எம்.பி. போட்டுத் தாக்கு



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு 69 லட்ச மக்கள் வழங்கிய ஆணை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற மக்களாணை அவரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளமை மக்களாணைக்கு முற்றிலும் விரோதமானது என நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

கண்டி – கடுகஸ்தொட்ட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டு மக்கள் பல்வேறு எதிர்பார்ப்பிற்கு மத்தியில் முறைமை மாற்றத்துக்காக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும்,2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு பல்வேறு காரணிகளால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு 69 லட்சம் மக்கள் வழங்கிய ஆணை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு தேர்தல் பிரசார மேடைகளில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கி மோசடியாளராகவும், நாட்டை காட்டி கொடுப்பவராகவும், பொருளாதாரத்தை இல்லாதொழித்தவராகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். ஆனால் தற்போது பொருளாதாரத்தை மேம்படுத்த அவரே இறுதி எனக் குறிப்பிட்டுக்கொண்டு அவருக்கு எதிரான 69 லட்ச மக்களாணை அவரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரையான காலத்தில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் இனம், மதம், யுத்தம், யுத்த வெற்றி ஆகியவற்றை தேர்தல் பிரசாரமாக பாவித்து ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியுள்ளன.4 குடும்பங்கள் தொடர்ச்சியாக நாட்டை ஆட்சி செய்துள்ளன. குடும்ப ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக திறமையானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை.

பொதுஜன பெரமுனவின் ஒருசில சுயசிந்தனையற்ற உறுப்பினர்கள் எமது அரசியல் பயணம் பற்றி விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். சிறந்த அரசியல் மாற்றத்துக்காகவே பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறோம். – என்றார்.

# தீவகத்தில் கடலட்டைப் பண்ணை அமைக்கப்பட்டால் களப்பு கடலைநம்பி தொழில் செய்வோர் பாதிப்படைவர்

## ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாச தலைவர் சுட்டிக்காட்டு




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.13

தீவகத்தில் கடலட்டை பண்ணை அமைக்கப்பட்டால் மீன் வளங்கள் இல்லாமல் போவதோடு களப்பு கடலை நம்பி தொழில் செய்பவர்கள் முழுமையாகப் பாதிப்படைவர் என்பதை கடற்றொழில் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும் என ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் சிவநேசபிள்ளை சிவச்செல்வன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு த்தெரிவித்த போதே கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தீவகத்தைப் பொறுத்தவரையில் ஆழ்கடல் மீன்பிடியை விட களப்பு கடலை நம்பி தொழில் செய்கின்றவர்களே அதிகம். இவர்களது வாழ்வாதாரத்தை யாரும் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை.

கடலட்டை வளர்ப்பு என்பது அந்நியச் செலாவணியை ஊக்குவிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. தீவகப் பகுதிகளில் கடலட்டை பண்ணைகளை உருவாக்குவதற்கான இடங்கள் சீன நாட்டுக்கு வழங்கப்பட்டு இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இதனால் மீன் வளங்கள் பெரும்பாலும் இல்லாமல் போகும் என்பதுடன் களப்பு கடலை நம்பி தொழில் செய்பவர்கள் பாதிப்படைவார்கள். இதனை கடற்றொழில் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும்.

கடலட்டை பண்ணை அமைக்க அனுமதிக்கும் போது அப்பகுதியை சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடாமல் அனுமதிக்கப் படுவதுடன், அவர்கள் இடத்தை அடையாளப்படுத்தி விட்டு செல்கின்றார்கள். நேரடியாக அரசாங்கத்திடம் அனுமதி எடுத்துவிட்டுவருகின்றார்கள். இது தொடர்பாக மக்களுக்கு எதுவும் தெரியாது. ஆகவே, எமக்கு தகவல் தெரிந்தவுடன் இதனை ஊடகங்கள் ஊடாக தெரிவித்து எமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம் – என்றார்.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்டமெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க தலைவர் மடுத்தின் பெனடிக், கடலட்டை வளர்ப்புக்கு அனுமதி கொடுக்கப்பட்டால் கடற்றொழிலாளர்களை அது பாதிக்கும். இருப்பினும் கடலட்டை பண்ணைக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

கடல் தொடுவாய்களை மறைத்து கடலட்டை பண்ணைகள் கட்டப்படுவதால் மீன்வரத்து குறைந்து கடற்றொழிலாளர்கள் பாதிப்பை எதிர்கொள்வார்கள்.

செயற்கை தொழில்களால் இயற்கை தொழில்கள் தீவகத்தில் பாதிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை.சீனாவுக்கு எங்களுடைய கடல் வளத்தைக் கொடுப்பதை முற்றும் முழுதாக நாங்கள் விரும்பவில்லை. எங்களிடம் வளம் இருக்கின்றது. இன்னொரு நாட்டிடம் அதனைக் கொடுத்து வளத்தை பெற வேண்டிய அவசியமில்லை.வெளிநாட்டுக்கு வளங்களை கொடுத்து நாங்கள் இன்னொரு நாட்டிடம் வளங்களைப் பெற வேண்டிய அவசியம் இல்லை. தீவக மக்களிடமும் எமது பகுதி புலம்பெயர்ந்த மக்களிடம் இதற்கான வளங்கள் இருக்கின்றன.

கடற்றொழில் அமைச்சரிடம் இது தொடர்பாக முறையிட்ட போதும் அதையும் மீறி கடலட்டை பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. – என்றார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ஜப்பானும் இந்தியாவும் பதுகாப்புத் தொடர்பாக உயர் மட்ட ஊடாட்டம், கூட்டுப் பயிற்சிக்கு முடிவு

**தைவான் ஜலசந்தியில் அதிகரித்து வரும் பதற்றங்கள் முதல் இலங்கைத் துறைமுகத்தில் சீன ஆய்வுக் கப்பலை சர்ச்சைக்குரிய வகையில் நிறுத்துவது வரை சீன இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணித்து ஜப்பானும் இந்தியாவும் தங்கள் பாதுகாப்பு உரையாடலைத் தீவிரப்படுத்துகின்றன.**



ஜப்பானிய பிரதமருடன் நான்கு அமைச்சர்களும்

சீனா தொடர்ந்தும் தனது கடல்சார் இருப்பைக் கட்டமைத்து வரும் நிலையில் அந்தப் பின்புலத்தில் ஜப்பானும் இந்தியாவும் கூட்டுப் பயிற்சிகளை விரிவுபடுத்துதல் மற்றும் உயர்மட்டப் பாதுகாப்பு ஊடாட்டத்தை அமைப்பது உட்பட கடல்சார் பாதுகாப்பில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த கடந்த வியாழனன்று ஒப்புக்கொண்டன

ஜப்பானிய வெளியுறவு மந்திரி யோஷிமாசா ஹயாஷி மற்றும் பாதுகாப்பு மந்திரி யசுகாசு ஹமாடா ஆகியோர் இந்திய வெளியுறவு மந்திரி சுப்ரமணியம் ஜெய்சங்கர் மற்றும் பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் ஆகியோரை டோக்கியோவில் நாடுகளின் இரண்டாவது டூ – பிளஸ் – டூ பேச்சுவார்த்தைக்காக சந்தித்தனர். கிழக்கு சீனக் கடல் மற்றும் தென் சீனக் கடலில் சீன விரிவாக்கம் பற்றிய குறிப்பு – ஒருதலைப்பட்சமாக நிலைமையை மாற்றும் முயற்சிகளுக்கு நான்கு அமைச்சர்களும் தங்கள் எதிர்ப்பை உறுதிப்படுத்தினர்.

“தற்போதுள்ள உலகளாவிய ஒழுங்குமுறைக்கு சவால்களைக் கருத்தில் கொண்டு, நாங்கள் முன்னெப்போதையும் விட அதிகமாக ஒத்துழைக்க வேண்டும் என்று ஹயாஷி கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையே வலுவான பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகளை ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

ஜப்பானிய தரப்பு ஐந்து ஆண்டுகளுக்குள் அதன் தற்காப்பு திறன்களை அடிப்படையாக வலுப்படுத்தும் திட்டங்களை கோடிட்டுக் காட்டியது. இதில் பதிலடித் தாக்குதல் திறன்களின் சாத்தியமான வளர்ச்சியும் அடங்கும்.

கூட்டத்தின் கூட்டறிக்கையில் இந்தியா பந்தோபஸ்து மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குத் தனது ஆதரவை வெளிப்படுத்தியது.

பாதுகாப்பு உபகரணங்களிலும் நாடுகள் ஒத்துழைக்கும். ஆளில்லா தரை வாகனங்கள் மற்றும் ரோபாட்டிக்ஸ் ஆகியவற்றின் கூட்டு வளர்ச்சிக்கு கூடுதலாக, ஜப்பானும் இந்தியாவும் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் எதிர்கால ஒத்துழைப்புக்கான உறுதியான பகுதிகளை மேலும் அடையாளம் காணும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இடமிருந்து, இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர், ஜப்பான் வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் யசுகாசு ஹமாடா ஆகியோர் டோக்கியோவில் செப்டம்பர் 8 அன்று கூட்டத்தின் போது இப்படி போஸ் கொடுத்தனர்.

ஜப்பானின் கூட்டுப் பணியாளர்களுக்கும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்களுக்கும் இடையே ஒரு விரிவான கலந்துரையாடலைத் தொடங்க அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.

ஹமாடாவும் சிங்கும் வியாழன் ஒரு தனி சந்திப்பில், ஜப்பான் வான் தற்காப்புப் படைக்கும் இந்திய விமானப் படைக்கும் இடையிலான முதல் கூட்டுப் போர் விமானப் பயிற்சிக்கான கலந்துரையாடலைத் தொடங்கவும் ஒப்புக்கொண்டனர்.

செப்டம்பர் 27 ஆம் திகதி ஜப்பான் முன்னாள் தலைவர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக ஜப்பானுக்கு மேற்கொள்ளும் பயணத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவையும் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தைவான் ஜலசந்தியில் அதிகரித்து வரும் பதற்றங்கள் முதல் இலங்கைத் துறைமுகத்தில் சீன ஆய்வுக்கப்பலை சர்ச்சைக்குரிய வகையில் நிறுத்துவது வரை சீன இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணித்து ஜப்பானும் இந்தியாவும் தங்கள் பாதுகாப்பு உரையாடலைத் தீவிரப்படுத் துகின்றன.




இரு நாடுகளினதும் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு

அமெரிக்காவுக்குப் பிறகு இந்தியாவுடன் டூ – பிளஸ் டூ பேச்சுவார்த்தைகளை நிறுவிய இரண்டாவது நாடு ஜப்பான். ஜப்பானும் இந்தியாவும் 2020 இல் கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

2012 ஆம் ஆண்டில் எஸ்.டி.எவ். மற்றும் இந்திய இராணுவம் தங்களது முதல் கூட்டு கடற்படை பயிற்சியை நடத்திய பிறகு, இந்தியா பல நாடுகளுடனும் கூட்டு ஒத்திகை மற்றும் இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ரஷ்யாவுடனான இந்தியாவின் நெருங்கிய உறவையும் முறியடிக்க ஜப்பான் விரும்புகிறது. சீனாவும் ரஷ்யாவும் இராணுவ ரீதியாக நெருக்கமாக வளர்ந்து வருவதால், ரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான நெருக்கமான உறவுகள் கிழக்கு ஆசியாவில் தற்போதைய இராணுவச் சமநிலையைச் சீர்குலைக்கும் என்று ஜப்பானும் அமெரிக்காவும் கவலைப்படுகின்றன.

மதிப்பின் அடிப்படையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா சுவீகரித்த பாதுகாப்பு உபகரணங்களில் பாதியை ரஷ்யாவே வழங்கியது. செப். 1 முதல் கடந்த 7 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெற்ற ரஷ்ய தலைமையிலான வோஸ்டாக் 2022 பயிற்சிகளில் இந்தியாவும் பங்கேற்றது.

இருப்பினும் ஹொக்கைடோவின் வடகிழக்கில் உள்ள தீவுகளை ஜப்பான் உரிமை கோரும் பின்னணியில், ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள – வடக்குப் பிரதேசங்கள் என்று அழைக்கப்படும் – ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் நடைபெறும் தொடர் பயிற்சிகளில் பங்கேற்க மாட்டோம் என இந்நந்தியா கூறிவிட்டது .

உக்ரைன் மீதான படையெடுப்பு தொடர்பாக ரஷ்யாவை பெயர் சொல்லி விமர்சிப்பதை இந்தியா தவிர்த்து வருகிறது. மொஸ்கோவைக் கண்டித்து ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் நடந்த மார்ச் வாக்கெடுப்பில் இருந்து இந்தியா விலகியதோடு ஜப்பானிய விமானங்கள் உக்ரைனுக்கு வழங்குவதற்காக இந்தியாவில் நிவாரணப் பொருள்களைச் சேகரிக்கவும் இந்தியா அனுமதிக்கவில்லை.

சீனாவை கட்டுக்குள் வைத்திருக்க ரஷ்யாவுடனான தனது உறவுகளை இந்தியா முக்கியமாகக் கருதுகிறது. புதுடில்லியும் பெய்ஜிங்கும் நீடித்த எல்லைப் பிரச்சினையில் சிக்கியுள்ளன.இது கடந்த காலங்களில் வன்முறையாக மாறியுள்ளது. அதே நேரத்தில் சீன நிறுவனங்கள் பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற இந்திய அண்டை நாடுகளில் துறைமுக வசதிகளையும் மேம்படுத்துகின்றன.

அதே நேரத்தில், சீனாவின் கடல்சார் விரிவாக்கத்தை எதிர்ப்பதற்கான ஒரு வழியாக ஜப்பான் மற்றும் அமெரிக்காவுடனான ஒத்துழைப்பை இந்தியாவும் பார்க்கிறது. உள்கட்டமைப்பு முதலீடு மற்றும் அதிநவீன தொழில்நுட்பம் போன்ற பாதுகாப்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்ற, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவை உள்ளடக்கிய Quadrilateral Security Dialogue அல்லது ‘குவாட்’டைப் பயன்படுத்த ஜப்பான் நம்புகிறது.

அதன் மையத்தில், இந்திய இராஜதந்திரம் இந்தியாவின் நலனை முதன்மைப்படுத்துகிறது என்று கிஃபு மகளிர் பல்கலைக்கழகத்தின் வருகைப் பேராசிரியரான டேகேனோரி ஹோரிமோட்டோ கூறினார்.

உக்ரைன் தொடர்பாக இந்தியாவைக் கொண்டு வருவது கடினமாக இருக்கலாம், ஆனால் சீன விவகாரத்தில் ஜப்பானும் இந்தியாவும் இணைந்து செயல்பட நிறைய இடங்கள் உள்ளன. – என்றார் அவர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சுதந்திரத்தின் பின்னர் மாறி மாறி ஆட்சிப் பீடம் ஏறிய அரசுகள் தமிழர் கோரிக்கைகளை நிராகரித்துள்ளன!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு



(க.கிருபாகரன்)

சுதந்திரத்திற்குப் பின் இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அத்தனை பேரும் இனவாத சிந்தனையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியாதவர்களாக, தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை தொடர்ச்சியாக புறக்கணித்த காரணத்தால் தமிழர்களின் அஹிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தததாக ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர்தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

போராட்டத்தை அடக்கப் போவதாகக் கூறிக் கொண்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தமிழ்மக்கள் மீது பிரயோகித்து, ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலியெடுத்தும், காணமல் போகச் செய்தும், வெற்றிக் கொண்டாட்டம் நடத்திய போது, உலகம் அப்பாவி மக்கள்மீது நடத்தப்பட்ட அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும், மனிதபடுகொலைக்கும் எதிராக இலங்கை மீதான கண்டனத்தை தெரிவிக்க ஆரம்பித்தது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான குறைந்தபட்ச நடவடிக்கை எதுவும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் அனைத்து நெருக்கடிகளுக்கும் பிரதான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது இனப்பிரச்சினை ஆகும்.

ஆகவே கடந்த கால அனுபவங்களை பாடமாகக் கொண்டு 52 ஆவது மனிதவுரிமை கூட்டத்தொடருக்கு முன்பாகவேனும் இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும். இல்லாவிட்டால், நாடு இன்று எதிர்நோக்கியுள்ள நெருக்கடியிருந்து மீள்வதென்பது பகற்கனவாகவே இருக்கும்.

இந்நிலையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனிதவுரிமை போன்ற விடயங்களைத் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றமை இலங்கை மீதான சர்வதேசத்தின் நம்பிக்கையை இழக்கச் செய்வதோடு, இந்தக் கூட்டத்தொடரில் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரனை நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளாக்கிவிடுமோ என்ற அச்சம் மேலெழுந்துள்ள நிலையில் சர்வதேசத்தையும் நாட்டு மக்களையும் ஏமாற்றாத வகையில் அரசாங்கம் தீர்க்கமான முடிவொன்றுக்கு வரவேண்டிய கட்டாயத்திலுள்ளது.

மேலும் 2009 ஆம் ஆண்டு 30 வருட தமிழர் விடுதலை போராட்டம் மௌனிக்க செய்யப்பட்டதன் பின் உறவுகளையும், உடைமைகளையும் இழந்து எஞ்சிய தமிழ் மக்களின் ஒரே நம்பிக்கை சர்வதேசம் மட்டுமாகவே இருந்தது. ஆனால், யுத்தம் நிறைவடைந்து சுமார் 13 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் இன்னும் தமக்கான நீதியை சர்வதேசத்தால் பெற்றுக் கொடுக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் அரசியல் தலைமைகள் தங்களின் அரசியல் பிழைப்புக்காகவோ, வாக்கு வங்கியை தங்கவைத்துக் கொள்வதற்கான மார்க்கமாகவோ எமது மக்களின் பிரச்சினைகளைக் கையாளாகாமல் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு அனைவரும் கைகோர்த்து, அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.

ஆகவே, இனியும் காலம் தாழ்த்தாது காணமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், அரசியல் கைதிகளை விடுப்பதற்கும், தமிழ்பேசும் மக்களுக்கு பொருத்தமான அதிகார பகிர்வொன்றை பெற்றுக்கொடுப்பதற்கும், இந்தநாட்டில் இருநூறு வருட வரலாற்றை கொண்ட மலையக மக்களின் பதிவு பிரஜை முறை நீக்கப்பட்டு, பொது பிரகடனத்தின் மூலம் இந்நாட்டின் பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் மலையகத் தமிழர்களுக்கு காணி உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கும், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், ஜனநாயக போராட்டங்களில் பங்கு கொண்டவர்களை விடுவிப்பதற்கும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கும், நாட்டுக்கு ஏற்ற புதிய அரசமைப்பொன்றை உருவாக்கிக் கொள்வதற்கும், நாட்டின் மீதும், மக்கள் மீதும் அக்கறையுள்ள அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்பட்டு, மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுத்து, எதிர்காலம் தொடர்பான அச்சத்தைப் போக்குவதற்கு ஐ.நாவின் 51 ஆவது மனித உரிமை கூட்டத் தொடர் காலத்தைத் தமிழ் பேசும்மக்களின் அரசியல் மற்றும் சமூக தலைமைகள் சரியாகப் பயன்படுத்துவது காலத்தின் கட்டாய தேவையாகும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## 8 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 24 வயதுடைய இளைஞன் யாழில் கைதானார்!



யாழ்ப்பாணம், கச்சேரி பகுதியில் வைத்து 8 அரை கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 20 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் 24 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். தலைமை பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய போதை ஒழுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர், சம்பவதினமான திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் கச்சேரி பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது வியாபாரத்துக்காக ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக் கொண்டு வீதியில் நடந்து சென்ற இளைஞனை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது, அவரிடமிருந்து 8 அரை கிராம் ஹெரோயின் போதை பொருள் மற்றும் 20 லச்சம் ரூபா பெறுமதியானதங்க ஆபரணங்களான 6 காப்புக்கள், 4 சங்கிலிகள், தோடுகள் என்பனவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனவும் இவர் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட தங்க ஆபரணங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவரைநேற்று(செவ்வாய்க்கிழமை) நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கையில் உணவு பாதுகாப்பின்மை மோசமடையக்கூடும் என எச்சரிக்கை!

பலவீனமான விவசாய உற்பத்தி, விலைவாசி உயர்வு மற்றும் தொடரும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை மோசமடையக்கூடும் என உணவு மற்றும் விவசாய அமைப்பும் உலக உணவுத் திட்டமும் எச்சரித்துள்ளன.

63 லட்சம் மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் எனவும், போதுமான உயிர்காப்பு மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படாவிட்டால் அவர்களின் நிலைமை மோசமடையக்கூடும் என்றும் கூறியுள்ளன.

ஏறக்குறைய 30 வீதமான மக்கள் ஏற்கனவே உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர், எனவே அவசர உதவி தாமதமானால், இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை மோசமடையக்கூடும் என இலங்கை உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதி விமலேந்திர சரண் கூறியுள்ளார்.

ஏறக்குறைய இரண்டு பருவகாலமாக பயிர்ச்செய்கை தோல்வியடைந்துள்ளமை காரணமாக இலங்கையில் உணவு உற்பத்தி கிட்டத்தட்ட 50 வீதம் குறைந்துள்ளது மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக உணவு மற்றும் தானியங்களின் இறக்குமதியும் குறைந்துள்ளது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சிங்கள மக்களின் சாணக்கியம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 122**

தமிழ் மக்களையோ மற்ற சிறுபான்மை இனத்தவரையோ கணக்கெடுக்காத 'ஜாதிக சிந்தனய' ஒப்பந்தத்தின் பின் இந்தியாவுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகள் பற்றி இந்தியா வெளியிட்ட கருத்துக்களையும் எச்சரிக்கைகளையும் தன்னுடைய தீவிர கவனத்திற்கு உட்படுத்தியது. அது மட்டுமல்லாமல், இந்தியாவின் நேரடி நடவடிக்கை அணுகுமுறை தெற்குக்கு விஸ்தரிக்கப்படக் கூடாது என்பதில் தீவிரமாக இருந்து, அதையொட்டி எல்லா எதிர்க்கட்சிகளையும் – ஜே.வி.பி. உட்பட – பொதுநிலை ஒன்றுக்கு வர ஏற்பாடு செய்தது.

இந்தியாவுக்கு எதிரான ஜே.வி.பியின் பிரசாரங்களில் இருந்து ஜாதிக சிந்தனய மாறுபட்டிருந்தது.


மதியுரைஞர் பாலாவும் மனைவியும்.

குணதாஸ அமரசேகரவுக்கு தமது தனிப்பட்ட அபிப்பிராயங்களில் இந்தியாவை ஒட்டிய பார்வை ஜே.வி.பி. தலைவர் விஜயவீரவை ஒத்திருந்தாலும், ஒப்பந்தத்தின் பின்னால், சாணக்கியத்தில், ஜே.வி.பி. கடைப்பிடித்த போக்குகளை அவர் ஏற்கவோ ஆமோதிக்கவோ இல்லை. இந்தியாவை எதிர்ப்பது நல்லதல்ல, அதனுடன் முரண்படுவதால் அந்த முரண்பாடுகள் வளர்ந்து, எதிரித் தன்மைகளுக்கு இடம் அளித்தால், சிங்கள, பௌத்த நாடு அதனது சுதந்திரத்தையும் இறைமையையும் இழக்க நேரிடும் என அவர் கருதினார்.

குணதாஸ அமரசேகர போன்றோர் சிங்கள மக்கள் இந்தியாவுடனான உறவைத் தங்களுக்கு நன்மை தருவதான விதத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்,


சோமவன்ஸ அமரசிங்கவும் றோஹண விஜேவீரவும்.

இன்றைக்கு இந்தியா இப்படியான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு மூல காரணமாக இருந்தது ஜே.ஆரின் அரசு மேற்கத்தைய ஆட்சிகளுக்கும் அமெரிக்காவுக்கும் அடிவருடி, தனது வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்துக் கொண்டமைதான் என்று அவர்கள் கருதினார்கள்.

ஜே.வி.பியும் அந்த மாதிரி தாங்களும் இந்தியாவுக்கு எதிரான பாதையில்தான் தங்களது வெளிநாட்டு கொள்கைகளை வகுப்போம் எனப் பிரச்சாரம் செய்வதோ, காரியங்கள் ஆற்றுவதோ முட்டாள்தனம் என அறிவுறுத்தினார்கள். இந்தியப் படைகளுக்கு எதிராக விடுதலை புலிகள் நடத்துவது பயங்கரவாதம் என்றும், அப்படியான குருட்டுத்தனமான நிகழ்வுகளை நடத்தி சிங்கள மக்களிடையே ஆதரவு பெற முயலாமல், ஜே.வி.பி. தங்கள் போராட்டங்களை ஜே.ஆரின் அரசுக்கு எதிராக நடத்த வேண்டும் என்ற பொதுக் கருத்து போராட்டத்தில் குதித்திருந்தோரில் வளர்வதற்கு வழிகள் வகுத்தார்கள்.

இவற்றால் எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தியாவுக்கு எதிரான போராட்டங்களை நிறுத்தி, அவற்றை ஜே.ஆரின் அரசை


நிருபம் சென்

நோக்கி முழுமையாக நகர்த்தியமை மட்டுமல்லாமல், ஜே.வி.பியின் சில முக்கிய தோழர்கள், சோமவன்ஸ அமரசிங்கவின் தலைமையில் இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதுவர் நிருபம் சென் அவர்களைச் சந்தித்து இந்தியாவுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு மன்னிப்புக் கோரினார்கள். அது மட்டுமல்லா


குணதாஸ அமரசேகர

மல், திருகோணமலைப் பகுதிகளில் இந்தியப் படைகளுக்கு எதிராகத் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்த குணரத்தினத்தை இந்தியப் படைகளுக்கு எதிராக எவ்வித செயல்பாடுகளிலும் இயங்க வேண்டாம் எனக் கட்டளையும் தந்தனர். குணரத்தினத்திற்கு இது ஏமாற்றமாகவும் ஆத்திரமாகவும் இருந்தாலும் இணங்கிப் போக வேண்டி இருந்தது.

சிங்களப் பகுதிகள் சாதுரிய தன்மையுடன் எதிர்கொள்ளக் கூடியவற்றை உணர்ந்து, எதிரித் தன்மையோடு வந்தவர்களை தங்களோடு நடுநிலைக்கு கொண்டு வர ஒரு முகமாக இயங்கிய போது, தமிழர் தேசத்தில் தமிழ் மக்களுக்கு அனுசரணைக்காக வந்தவர்களை, தமிழ் மக்கள் ஆக்கிரமிப்புப் படையாக மாறிவிட்டார்கள் என தரப்பட்ட கோஷங்களை முன்னெடுத்து கூவி கூவிக்கொண்டு, ஏகோபித்த தலைமையை ஊர்ஜிதப்படுத்த உதவியாக தமிழ் மக்கள் நாட்டிலும் புலம்பெயர்களிலும் துணை போனார்களே ஒழிய, மாற்றாக ஜாதிக சிந்தனய போன்று தமிழ் மக்களின் எவ்வித அமைப்புகளோ நடப்பவை முட்டாள்தனமானவை எனக் கருத்தாக்கங்கள் செய்து பாதைகளைச் செப்பனிட முயலவில்லை.

### பிரபாகரனின் கடிதங்கள்

அச்சமயத்தில் பிரபாகரனும் ராஜீவ் காந்திக்கு மூன்று கடிதங்களை எழுதினார்.

பிரபாகரன் ராஜீவுக்கு எழுதிய முதலாவது கடிதம் 12 அக்டோபர் 1987 திகதியிடப்பட்டிருந்தது. அதாவது முரண்பாடுகள், போர் தொடங்கிய மூன்றாம் நாள்.

அதில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தொடங்கப்பட்ட யுத்தம் ஒப்பந்தத்தை மீறுவதாகிறது எனவும், அதுவே தமிழ் மக்களது கருத்தாகும் எனவும், இவற்றால் நடக்கப் போகின்ற விளைவுகளுக்கு இந்தியாவே முழு பொறுப்பும் ஏற்க வேண்டும் எனவும், அதனால் இந்தியப் படைகள் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

பின்னர் 14 அக்டோபர் 1987, பின் 13 ஜனவரி 1988 ஆகிய திகதிகளில் மற்றைய கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அவற்றில், போர் தமிழ் மக்களது நிலையையும் வாழ்வாதாரங்களையும் சீரழிப்பதாகவும், பல தமிழ் மக்கள் இடம் பெயர்வுகளுக்கு உள்ளாகி வருகின்றனர் எனவும், ஒப்பந்தத்தின் கீழ் சமாதானத்தை பேணுவதுதான் இந்தியாவின் கடமையே யொழிய ஆக்கிரமிப்பு அல்ல, அதற்குப் பொது மக்களின் பலத்த ஆதரவைப் பெற்ற விடுதலை இயக்கத்தை அழிக்க சட்ட அதிகாரம் தரப்படவில்லை, கிழக்கு மாகாணத்தில் நடந்த சம்பவங்கள் இங்கு குமரப்பா, புலேந்திரன் மற்றும் போராளிகளின் இறப்பால் மக்கள் தன்னிச்சையாக நடத்தியவையே ஒழிய, அவை விடுதலைப் புலிகளால் தூண்டப்பட்டவை அல்ல எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. விடுதலை புலிகள்தான் மக்களின் பிரதிநிதிகள். அவர்கள் ராஜீவுடன் இருந்த புரிந்துணர்வின்படி தாங்கள் பெரும்பான்மை பெற்றிருக்கும் இடைக்கால நிர்வாக அரசு அமைந்த பின்தான் ஆயுதங்களை கையளிப்பார்கள் என்பதும் தெளிவாகப் பட்டிருந்தது.

பேச்சுக்கு வருவதற்கு தாங்கள் தயார் என பிரபாகரன் கடிதங்களில் குறிப்பிட்டு, இந்தியப் படைத் தளபதிகளுக்கும் அவை தெரியப்படுத்தப்பட்டனவாயினும் ராஜிவிடம் இருந்து எந்த வித பதிலும் அக்கடிதங்களுக்குக் கிடைக்கப் பெறவில்லை.

இவற்றிற்கு மத்தியில் மதியுரைஞர் பாலசிங்கமும் அவரது மனைவி அடேலும் சென்னைக்குத் தப்பிச்சென்று தலைமறைவாக வாழ்ந்து, அங்கு அவர்களுக்கு ஆதரவாக இருந்தவர்கள் மூலம் நிலைமைகளைத் தெளிவுபடுத்தி ஆதரவு தேடினர்.

(வளரும்...)

## வெள்ளவத்தை கடலை ஒட்டி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளவத்தைக் கடலில் நீராடச் சென்ற கின்ரோஸ் உயிர்காப்பு நிறுவன ஊழியர்கள், முதலை குட்டி ஒன்றை பிடித்து வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர் ஏனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில், சவோய் தியேட்டர் அருகே உள்ள கால்வாயில் நான்கு பெரிய முதலைகள் காணப்பட்டனவாம். வெள்ளவத்தை பிரதேசத்தில் 40 முதலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த முதலைகள் தொடர்பில், கின்ரோஸ் உயிர்காப்பு நிறுவனம் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்த போதும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே வெள்ளவத்தை மற்றும் அதனை அண்மித்த கடற்பகுதிக்கு செல்பவர்கள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கைதிகள் தினத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைக்க புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும் எனத் தமது கடமை பொறுப்பேற்கும் நிகழ்வில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

## நியாய விலையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணெண்ணை விலை அதிகரிப்புக்கு பின்னர் அதனுடைய வரத்து அதிகரித்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மண்ணெண்ணெய் பதுக்கிவைத்துவிட்டு தற்போது விலை அதிகரிக்கப்பட்ட பின்னர் தற்போது வாரத்துக்கு ஒருமுறை மண்ணெண்ணெய் விநியோகிக்கிறதா என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சாமசங்களின் சம்மேளன உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் கேள்வியெழுப்பினார்.

யாழ் ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

கடந்த சில மாதங்களாக மண்ணெண்ணை வராமல் மக்கள் பட்டினியால் பாரிய சிக்கல்களுக்கு உள்ளாகினர். மண்ணெண்ணையை கள்ளச்சந்தையில் 1,200 ரூபாவுக்கு வாங்கித் தொழில் செய்ய வேண்டி ஏற்பட்டது.

மண்ணெண்ணை விலையை 340 ஆக அதிகரித்துவிட்டு தற்போது வாரத்துக்கு ஒருமுறை மண்ணெண்ணை வருகின்றது. ஆனால் தொழில் செய்வதற்கு நம்மிடம் பணம் இல்லை. ஒவ்வொரு அரசாங்கமும் ஊழலை செய்து கொள்ளையடித்து விட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக்கொள்கிறார்கள்.

தற்போது மானியம் என்ற போர்வையில் படகுகளின் பதிவுப் புத்தகங்களையும் வங்கி கணக்கிலக்கங்களையும் நீரியல் வளத் திணைக்களத்தினர் வாங்கினார்கள். புரவிப் புயலுக்கும் இவ்வாறு வாங்கி ஏமாற்றினர்.150 ரூபாவுக்கு உட்பட்டோ பழைய விலைக்கோ மண்ணெண்ணை வழங்கப்பட வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம். அந்த விலைக்கு மண்ணெண்ணை தராது விட்டால் நான்கு மாவட்ட கடற்றொழிலாளர்களும் கலந்தாலோசித்து வடக்கில் நாங்கள் போராடுவதற்கு தயாராக இருக்கின்றோம்.150 ரூபாவிற்கு உள்ளே மானிய அடிப்படையில் மண்ணெண்ணை வழங்கினால் தான் எம்மால் தொழில் செய்ய முடியும். இது சம்பந்தமாக அதிகாரிகளிடம் தெரிவித்து முறையிட்டும் பலனில்லை.

சரியான அரசாங்கமாக இருந்தால் அரசாங்கம் அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதியிடம் இருந்து பணத்தை எடுத்து நாட்டை அபிவிருத்தி செய்யுங்கள். மண்ணெண்ணை விலையேற்றம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் குரல் கொடுக்கவில்லை. அதை பற்றி யாருக்கும் சிந்தனை கிடையாது.

வடமராட்சி கிழக்கு பகுதிகளில் சுருக்கு வலை, நுளம்பு வலை போன்ற சட்டவிரோத தொழில்கள் அதிகரித்துவிட்டதனால் மீன்வளங்கள் அழிக்கப்படுகின்றன.இதற்குஉளந்தஅதிகாரிகளும்நடவடிக்கை எடுத்ததில்லை. அமைச்சர்கள் இருந்துவிட்டு நாளை போய் விடுவார்கள். நீரியல் வளத் துறையே இதற்கு பொறுப்பு கூற வேண்டும். - என்றார்.

## மூன்று சிறார் பிக்குகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர் என்று கூறப்படும் விடயம் நேற்று கல்முனை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபரான பௌத்த மதகுருவை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் புதிதாக இணைந்த 3 இளம் பிக்குகள் திடீர் சுகயீனம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம்(ஒகஸ்ட்) இறுதி பகுதியில் இளம் பிக்குகளின் பெற்றோரினால் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமைய அம்பாறை பொது வைத்தியசாலையில் உள்ள பிக்குகளுக்கான தனியான சிகிச்சை பிரிவிற்கு 3 இளம் பிக்குகளும் வைத்திய பரிசோதனைக்காக மாற்றப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியிடம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மூன்று இளம் பிக்குகளும் தாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் தலைமை பௌத்த துறவியினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகினர் என சட்ட வைத்திய அதிகாரியிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை அடுத்து குறித்த 3 இளம் பிக்குகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றனர் எனச் சட்ட வைத்திய அதிகாரியும் தனது வைத்திய அறிக்கை ஊடாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு குறிப்பிட்டிருந்தார் என அறிய வந்தது.

இதனை அடுத்து இச்சம்பவம் தொடர்பில் மருத்துவ அறிக்கை பிரகாரம் செப்ரெம்பர் முதலாம் திகதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் மாவட்ட சிறுவர், பெண்கள் விசாரணைப் பிரிவினர் வைத்தியசாலைக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இதன் பின்னர் இந்தச் சம்பவ விசாரணை அறிக்கை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலின் பிரகாரம் கடந்த 05 ஆம் திகதி கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக தயார் படுத்தப்பட்டது.

இதற்கமைய செப்டம்பர் 06 ஆம் திகதி துஷ்பிரயோகம் காரணமாக குற்றம் கூறப்படுகின்ற பிரதான சந்தேக நபராக கருதப்படும் பௌத்த மதகுரு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று கல்முனை தலைமையக பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

மேலும் இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட இளம் பிக்குகளின் பெற்றோர் ஏற்கனவே வழங்கிய முறைப்பாட்டிற்கமைய அம்பாறை பகுதியில் இருந்து வருகை தந்த விசேட பொலிஸார் கல்முனை பகுதியில் உள்ள அந்த் பௌத்த விஹாரைக்கு சென்று விசாரணை மேற்கொண்டமையுடன் சந்தேக நபரான பிரதான பௌத்த மதகுருவிடம் வாக்குமூலங்களைப் பெற்றும் இருந்தனர்.

மேலும் இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் பிக்குகளின் ஆசன பின்துவாரத்தில் காயங்கள் மற்றும் தழும்புகளும் காணப்படுவதுடன் மூவரும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி உள்ளமை வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

மேலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான ஒன்று விட்ட சகோதரர்களான 08 , 13 , 14 , வயது மதிக்கத்தக்க 3 இளம்பிக்குகளும் ஏற்கனவே அம்பாறை மாணிக்கமடு, இறக்காமம் பகுதியில் மத போதனைக்கு சேர்க்கப்பட்டிருந்த போது அங்குள்ள விகாரையில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அண்மையில் கல்முனை பகுதியில் உள்ள பௌத்த விஹாரைக்கு புதிதாக இணைக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பொலிஸாரினால் சந்தேக நபராக இனங்காணப்பட்ட பிரதான பௌத்த மதகுரு கல்முனை உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுதல் தொடர்பில் தமிழர் தரப்புக்கு ஆதரவாகச் செயற்படுபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டிராக்டர் வேகக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த போது அது வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை முத்தையன்கட்டு எல் வி சந்திப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிராக்டர் மின் கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது. காயமடைந்த சாரதி மக்களால் மீட்கப்பட்டு ஒட்டுசுட்டான் மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுமாலை உயிரிழந்துள்ளார்.

பெரியசாமி ராஜ்குமார் (வயத்து32) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணையை ஒட்டிசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

## கடனை மறுசீரமைப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாட்டை எட்டுவதே அதன் நோக்கமாகுமென பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரனகுறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து தேவையான நிதி நிவாரணங்களை பெறுவதற்கு நாட்டில் கடன் மறுசீரமைப்பு அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம், நிதி ஆலோசகர்களான “லாசார்ட்” இன் சேவைகளைப் பெறுவதற்கு இலங்கை அதிகாரிகள் தீர்மானித்தனர். சர்வதேச சட்ட ஆலோசனை நிறுவனமான ‘கிளிஃபோர்ட் சான்ஸ்’ நிறுவனமும் நாட்டில் கடன் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ஆதரவளித்து வருகிறதென தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் கடன் 85 பில்லியன் டொலர் முதல் 100 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# வெளிவிவகார அமைச்சரின் கருத்துக்கு காணாமற்போனோர் உறவுகள் காட்டம்!




ஜெனீவாவில் திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு கருத்து தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளதோடு, தமக்கு சர்வதேச விசாரணையே தேவை எனவும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் சங்கத் தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி மற்றும் செயலாளர் பிரபாகரன் றஞ்சனா ஆகியோர் நேற்று (செவ்வாய்க்கிழமை) முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தனர்

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு இலங்கை தொடர்பான விடயத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பாக சர்வதேச விசாரணையை நாம் தொடர்ச்சியாகக் கோரிவருகிறோம்.

எனினும், எமக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எந்த விடயமும் முன்வைக்கப்படாமை கவலையளிக்கிறது.

இதேவேளை இந்த கூட்டத்தொடரில் சர்வதேச விசாரணையை தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்துக்கிறோம்.

பாதிக்கப்பட்ட தரப்புக்களாக நாம் 13 ஆண்டுகளாகப் போராடியும் எந்த தீர்வும் இல்லாது சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஆரம்பித்த தொடர்ச்சியான போராட்டம் இன்று (நேற்று) 2015 ஆவது நாளாக தொடர்கிறது.

இந்நிலையில் ஜெனீவாவில் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் கருத்துத் தெரிவித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியின் கருத்து, எமது உணர்வுகளைப் புறந்தள்ளி அரசைப் பாதுகாப்பதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தனர்.

## 50 ரூபாவுக்கும் மேல் முட்டை விற்றால் சட்ட நடவடிக்கை!

நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிரடி

அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 80 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஒரு முட்டையை 50 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டுபிடிக்க சோதனை நடத்தப்படும் என்று அதன் தலைவர் சாந்த நிரியல்ல தெரிவித்தார்.

தொடர்ந்து அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யும் வியாபாரிகளைக் கண்டுபிடிக்க சோதனை நடத்தப்படும் என்றும் தலைவர் சாந்த நிரியல்ல குறிப்பிட்டார்.

## மேலும் பல அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்படுவர் என பிரசன்ன தகவல்!



மேலும் 10 அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்கும் சாத்தியம் உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சரிடம், மேலும் பல அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறப்படுவதன் உண்மைத்தன்மை தொடர்பாகக் கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்குப் பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அமைச்சர், மேலும் பல அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன்.

மேலும் 10 அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்படலாம். அப்போது 30 ஆக அதிகரிக்கப்படும்.

பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு இதை விட கூடுதல் உதவித்தொகை கிடைக்கிறது. நம்மைவிட பத்து பதினைந்து மடங்கு அதிகமாக வாங்குகிறார்கள். எனவே அதையும் நிறுத்த வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாயி பஜனை ஆங்கில நூல் பௌர்ணமியன்று வெளியீடு!





சாயி பஜனை ஆங்கில நூல் வெளியீட்டு விழா கடந்த பௌர்ணமி தினத்தன்று கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் இடம்பெற்றது.

விழாவின் பிரதம அதிதியான இந்திய விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ரெவன்ட் விக்ரமசிங் நூலின் முதல்பிரதியை சாயி மந்திரி பிரதம அறங்காவலர் எஸ். என். உதயநாயகனிடம் இருந்து பெற்றுக்கொள்வதையும், நூலின் தொகுப்பாசிரியர் திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன், சாயி நிலைய உபதலைவர் சிவா இராஜஜோதி ஆகியோரையும், பஜனை பாடுவோரையும் படங்களில் காணலாம்.

## அரசியல் தீர்வை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம்!

வடக்கு – கிழக்கு சிவில் சமூகத்தினரால் முன்னெடுக்கப்படும் 100 நாள் போராட்டத்தின் 44 நாளாவது நாள் போராட்டம் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

வடக்கு – கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிய குறித்த போராட்டம் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பமாகி 44 ஆவது நாளான நேற்று கிளிநொச்சி கோரக்கன்கட்டு பிரதேசத்தில் இடம்பெற்றது.

வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான தீர்வு வேண்டும் என வலியுறுத்தி இந்த அமைதிப் போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு – கிழக்கு சிவில் சமூகத்தினர் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் மக்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் தொடர்ந்து அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## செப்ரெம்பர் மாதத்தின் முதல் பதினொரு நாள்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வருகை

செப்டெம்பர் மாதத்தின் முதல் பதினொரு நாள்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது நாட்டுக்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கையில் மெதுவாக ஆனால் நிலையான அதிகரிப்பைக் குறிக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தற்காலிகத் தரவுகளின்படி, செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் 11ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மொத்தம் 10 ஆயிரத்து 796 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதனையடுத்து, ஆண்டுக்கானமொத்த வருகைகள் 5 இலட்சத்து 7 ஆயிரத்து 226 ஐ எட்டியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலத்துக்கான தினசரி வருகை விகிதம் ஒரு நாளைக்கு 979 சுற்றுலாப் பயணிகளாகும் என்றும் அந்தச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் இந்தியா, யுனைடெட் கிங்டம் மற்றும் ஆஸ்திரேலியாவில் இருந்தே அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

## எரிவாயு இறக்குமதியில் உலக வங்கியின் பணம் தவறாகப் பயன்படுத்தப் பட்டதா?

லிற்றோ விளக்கம்

எரிவாயு இறக்குமதி ஒப்பந்தம் மற்றும் சர்வதேச கொள்முதல் ஆகியவற்றில் உலக வங்கியின் பணம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை என லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக லிற்றோ நிவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தங்கள் நிறுவனம் முழு வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதாகவும் உலக வங்கியின் மேற்பார்வையின் கீழ் மற்றும் அமைச்சர்களின் மேற்பார்வையின் கீழ் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

எனவே, பணம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக வெளியான செய்திகளை முற்றாக நிராகரிப்பதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## மருந்து கொள்வனவுக்கு சுகாதார அமைச்சுக்கு மேலதிகமாக 10 கோடி டொலர் நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, செப். 14

மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சுக்கு 10 கோடி டொலர்களை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக குறித்த நிதி மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2022இல் வெளியிடப்பெற்றது.